தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை
மலர் 2, இதழ் 1, 2021
ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்
பன்னாட்டுத் தரப்புத்தக எண்: 9788194845959
இணையதளம்: http://restpublisher.com/book-series/ctll/

நவீனத் தமிழ்க் கவிதைகளில் விடுதலைக் கருத்தியங்கியல்

(இன்குலாப் கவிதைகளை முன்வைத்து...)

சி. விஜய்
உதவிப் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை,
அருள் ஆனந்தர் கல்லூரி (தன்னாட்சி), கருமாத்தூர். மதுரை.

கவிதை என்பது அனுபவ அவதானிப்புகளின் ஊடாக மனச்சலனத்தின் நுண்தளத்தில் கருக்கொண்டு, வெளிப்படும் தனித்துவமான ஆற்றல்களைக் கொண்ட கலை வடிவமாகும். சமூகத் தளங்களோடும் தனிமனித எண்ணப் போக்குகளோடும் அனுபவமாகி, மொழிவழி வெளிப்படும் கவிதைக்குள் கவிஞனின் அக, புற வாழ்க்கைச் செயல்பாடுகளும், கருத்தியல் நிலைப்பாடுகளும் இயக்கம் கொள்கின்றன. அறிவியலுக்கு ஒவ்வாத மரபார்ந்தப் பிற்போக்குக் கருத்தியல் அடித்தளங்களின் மீது கட்டமைக்கப்பட்டு மக்கள் வாழ்க்கையில் நிலைத்தத் தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் காரணிகளை அடையாளங்காட்டி, ஆய்ந்தறிந்துத் தீர்வுகளை முன்மொழிகிறத் தன்மையில் இருபதின் கவிதை இலக்கியத்தளம் பயணித்திருக்கிறது. இலக்கியப் படைப்புத் தளங்களில் அறிவியல், அரசியல் கருத்துக்களின் தாக்கங்களுடன் மக்களை மய்யப்படுத்தியதாக புதிய இலக்கிய இலக்குகளை நோக்கி படைப்பிலக்கியம் நகர்ந்த இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் தமிழ்ச்சமூகத்தின் கருத்தியக்கச் சாரங்களை வெகுவாகக் காண முடிகிறது. குறிப்பாக, இருபதாம் நூற்றாண்டில் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தமிழ் இலக்கியத்தளம் ஓர் சுதந்திரவெளியினை அடைந்திருக்கிறது. சுரண்டலுக்கு ஆட்பட்டு வாழ்வுரிமை இழந்த உழைக்கும் மக்கள் தங்கள் உரிமைகளுக்காகக் குரலெழுப்பும் வீரியமிக்க கருத்தியல்சார் மொழிப்புலத்தைப் பெற்றிருக்கின்றனர். காலத்தினை அறிவியல் ரீதியிலான அணுகுமுறைகளின் வாயிலாக முன்னை வரலாற்றோடும் பின்னை நோக்குகளோடும் பதியச்செய்து கருத்துக்கள் ஒன்றையொன்று வெட்டியும் ஒட்டியும் இயங்குகின்ற நவீனக் கவிதைகளின் உள்ளடக்கத்தினுள் இருபதின் தமிழ்ச்சமூகம் காட்சிப்படுகிறது. காலந்தோறும் கவிதை காட்டும் சமூக மதிப்பீடுகளைக் கவனத்தில் கொண்டு, சமூகத்தின் இயக்கத் தன்மைகளை நுணுகி ஆய்ந்தறிவதன் வாயிலாக மக்கட்குழுவின் பொதுக் கட்டமைப்பின் வினையூக்கிகளைப் புரிந்துகொள்ள முடியும். அவ்வாறான முயற்சியாக சமூக விடுதலையை நோக்கி இலக்கியத்தைச் செலுத்திய பாவலர் இன்குலாப் மொழி வழியாக இருபதாம் நூற்றாண்டின் சமூகத்தின் விடுதலைக் கருத்தியக்கத்தை அறியும் முயற்சியே இக்கட்டுரையாகும்.

கருத்தியல் இயக்கமான இருபதின் இலக்கியங்கள்

உலக வரலாற்றில் முக்கியத் தாக்குரவுகளை ஏற்படுத்திய இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தனியுடைமைக் காலனிய வல்லாதிக்கத்திலிருந்து மீண்டபின்னர், இந்தியச் சிந்தனைவெளி மரபார்ந்த புராணக் கட்டுகளினின்று அறிவியல் கல்வியால் நீங்கத் தலைப்பட்டது. குறிப்பாக, தமிழ் இலக்கியவெளி முற்போக்குக் கருத்தியல்சார் சிந்தனை மட்டங்களில் பயணித்தது. உலகமயத்திற்கு ஆட்பட்ட பொருளாதாரக் கொள்கைகளால் வாழ்வாதாரத்தைத் தீர்மானிக்கும் அரசியல், சமூகம், மொழி மற்றும் பண்பாட்டு நிலைகளிலும் குறிப்பிடத்தக்க நேர்மறை – எதிர்மறை விளைவுகளை நிகழ்த்திய இருபதாம் நூற்றாண்டுக் காலவெளியில், தனியுடைமையையும் அறிவுக்கு ஒவ்வாத முன்னை மரபுகளையும் மறுத்த அறிவியக்கங்களான மார்க்சிய, பெரியாரியச் சிந்தனைகளை உள்வாங்கியவாறு இயக்கம் கண்ட உழைக்கும் மக்களின் கருத்தியல் ஓர்மையையும், முதலாளியச் சமூகத்தின் ஆதிக்க மய்யங்களுக்கு எதிரான எதிரெழுச்சியையும் தமிழ்ச்சமூகம் கண்டது.

இலக்கிய நிலையிலும், கருத்தியல் நிலையிலும் கேள்விகளோடும் தீர்வுகளோடும் இயக்கங்கள் தலையெடுத்த இருபதாம் நூற்றாண்டின் கவிதைமொழி இயக்கம் பெறுகின்றப் பாங்கினை உற்று நோக்குகையில் தமிழ்ச்சமூகத்தின் வரலாற்று, பொருளிய அடிமைத் தனங்களுக்கானக் காரணங்களை அறிதலோடு, தமிழ்ச்சமூகம் கொண்டிருந்த நிலைப்பாடுகளை விரிவாகவும் நுட்பமாகவும் அறிய முடிகிறது.

இருபதாம் நூற்றாண்டில் கருத்தியல் இயக்கங்கள்

காலனிய ஆதிக்கத்திலிருந்து போராடி விடுபட்ட உழைக்கும் மக்கள், விடுதலைக்குப் பிந்தைய பாராளுமன்ற மக்களாட்சி உருவாக்கத்தின்போது மீண்டும் இந்தியாவின் புராண மயப்பட்ட சாதியப் படிநிலைச் சமூகமாகி இருந்த நிலையில் நிலவுடைமையாளர்களிடம் இருந்து விடுபட வேண்டிய கட்டாயத்திலேயே இருந்தது. சாதிய, வர்க்க அடிமைத்தனக் கட்டமைப்புகளுக்குள் இயங்கும் படிநிலைச் சமூக அமைப்பைச் சீர்படுத்தும் நோக்குடன் பல்வேறு மாற்றுக் கருத்துருக்கள் காலனியத்திலேயேக் கருக்கொண்டுவிட்டன. என்றாலும் விடுதலைக் கருத்தியல்கள் வீரியத்துடன் மக்கள் மயப்பட்டது இருபதாம் நூற்றாண்டில் தான் எனலாம். குறிப்பாக, ரஷ்யப் புரட்சி (1907) வெற்றிக்குப்பின் உலகளாவியப் பொருளியச் சமநிலைக்கு வழிகோலும் காரல் மார்க்சின் பொருளியச் சிந்தனையுடன் இந்தியாவில் இயக்கங்கண்ட பொதுவுடைமைக் கருத்தியலும், மரபார்ந்தச் சாதியக் கட்டமைப்பின் இழிநிலைகளுக்கானக் காரணங்களைக் கண்டறிந்து களைந்து, கடந்தகால இழிவுகளுக்கான இழப்பீடுகளைப் பெறப் போராடிய அம்பேத்கரின் தலித்தியச் சிந்தனையும், சமூகத்தின் ஆதிக்க வேர்களைப் பாதுகாத்து கிளைபரப்பி நின்ற சமயக் கட்டுமானங்களின் மீது வலுவான எதிரியக்கம் கண்ட பெரியாரின் ஆரிய,

பிராமணியத்திற்கு எதிரான திராவிடச் சிந்தனையும் வலுவாகக் களம் கண்டன. மார்க்சியப் பொதுவுடைமைக் கருத்தியலோடு இந்தியாவில் இயக்கங்கண்ட பொதுவுடைமைக் கட்சியும், வலதுசாரி இந்துத்துவப் பிராமணியக் கருத்தியலோடு ராஷ்டிரிய சுயம்சேவக் சங்கமும் இயக்கங்கண்ட 1925-ம் ஆண்டு இந்தியக் கருத்தியல் தளத்தில் குறிப்பிடத்தக்கதாகும். எழுபதுகளுக்குப்பின் முதலாளிய நாடுகளிடையேயானச் சந்தைப் பிடிப்புப் போட்டிகளும், இந்தியாவின் உலகமய ஒப்பந்தங்களும், உள்நாட்டு அரசியல் குழப்பங்களும், அரசின் பொருளியத் தெளிவற்ற நிலையாலும் அனைத்துப் பொருளாதார மட்டங்களிலும் கடும் தாக்கங்களை ஏற்படுத்தின. 1991 சூலை 24 இந்திய நிதியமைச்சர் மன்மோகன் சிங்கின் தனியார் முதலீட்டுக்கான கட்டற்ற வர்த்தக அனுமதி அறிவிப்புக்குப் பின் மீண்டும் முதலாளியத்தின் பிடியில் இந்தியா சிக்குண்டது. காலனியக் கொடுமைகளை முன்பே உணர்ந்திருந்ததாலும், மரபார்ந்த புராணப் படிநிலைச் சமூகக் கட்டமைப்பின் அடிமைத்தன வடிவங்களை நன்கு உணர்ந்திருந்ததாலும் அசமத்துவத்தை எதிர்த்து இந்தியா முழுக்க நிகழ்ந்த எதிரெழுச்சியால் பிராந்தியக் கட்சிகளின் தோற்றங்களும் நிகழ்ந்தன. தமிழ்நாட்டின் அரசியல் களத்தில் பெரியாரின் திராவிடச் சிந்தனை அண்ணாதுரை தலைமையில் அரசியல் அதிகாரத்தை நோக்கித் தலைப்பட்டு, சமத்துவச் சமுதாயத்துக்கான முன்னெடுப்பாக சமூகநீதிக் கருத்தியலுடன் மக்களை அரசியல்படுத்தியது. இடது, சனநாயக முற்போக்குக் கருத்தியல்கள் மக்களை அணிதிரட்டி வகுப்புவாரி பிரதிநிதித்துவம், இடஒதுக்கீடு, சமயச்சார்பின்மை, பன்முகப் பண்பாட்டு ஓர்மைப்பாடு என மக்களாட்சியின் மாண்புகள் முன்னெடுக்கப்பட்டாலும் மரபார்ந்த, பழமைவாதச் சிந்தனையுடன் சாதிய, சமய மேலாதிக்கத்தின் வழியாகப் பொருளிய மேலாதிக்கத்தை நிலைப்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து வந்தன. அதிகாரத்தின் உயர்மட்டங்களில் தம்மை நிலைநிறுத்திக் கொண்ட பிராமணிய, முதலாளியக் கூறுகள் சனநாயகத்தை தங்களுக்குச் சாதமான அமைப்பாக மாற்றியிருந்தன.

கருத்தியல்சார் தமிழ்க்கவிதை இயக்கத்தளம்

தமிழ்நாட்டில் வர்க்க, பொருளாதார, சுயமரியாதை சமூகச் சமநிலையுடன் இயங்கிய விடுதலைக் கருத்தியல்களுக்கு உழைக்கும் மக்களிடம் கிடைத்த வரவேற்பும், மக்களின் பங்கேற்பும், குறைந்தபட்ச அரசதிகாரப் பிரதிநிதித்துவமும் நவீன இலக்கியத்தின் போக்கை மாற்றியமைத்தன. இந்திய அரசியல் வெளிக்குள் தனித்த அடையாளங்களுடன் சிறந்திருந்த மக்களினங்களின் சுயாதீனச் சிந்தனைக்கும் கருத்தரசியல் தளங்களே வழிகோலின. மொழி, வழிபாடு, கலை, உள்ளிட்ட வாழ்வியல் பண்பாட்டுப் பன்முகத் தன்மையை ஏற்ற கூட்டாட்சியாகவே மக்களாட்சி ஏற்கப்பட்டது. ஒற்றை மொழி, ஒற்றை வழிபாட்டு நெறி, ஒற்றை வாழ்வியல் முறை என, பாசிசத் தன்மையான தேசியம் எனும் ஒற்றை மயத்தை நிறுவிட முன்னெடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் கடும் எதிர்ப்பை சந்தித்தன. ஒற்றை மயத்தை நோக்கிய அரசதிகாரப் போக்கை மக்களாட்சியை நோக்கி மய்யங்கொள்ளச் செய்ததில் இடதுசாரி, தலித்திய, திராவிடக் கருத்தியல் புலத்திற்கு மிகப்பெரியப் பங்குண்டு. என்றாலும், இவ்வியக்கங்கள் அரசியல் ஓர்மையுடன் அணியமாக இயலாமையினாலும் அதிகாரப் பங்கேற்பில் அதிக கவனம் கொள்ளாமையினாலும் காங்கிரஸ் பேரியக்கத்தினுள் மய்யங்கொண்டு மறைந்திருந்த முதலாளியச் சார்புடைய, பிற்போக்கான மனுவாதக் கருத்துருக்கள் அரசியல் வலுப்பெற்று மக்களாட்சியைத் தமக்கேற்பக் கட்டமைத்த காலகட்டத்தில் முற்போக்குக் கருத்தியல் இயக்கங்களால் இலக்கியங்கள் சமூகச் சீர்திருத்தப் பிரச்சாரக் கருவிகளாக மாற்றம் கண்டன.

இந்தியாவில் முதலாளியம்

இந்தியாவில் முதலாளியம் என்பது சனாதனிய முதலாளியமாகவே அமைந்திருக்கிறது. முதலாளியம் எப்போதும் பொருளிய ஆதிக்க நோக்கில்தான் நடைமுறையில் இயங்குகிறது. என்றாலும், இந்தியாவில் சாதியப் படிநிலைச் சமூகமாகப் புராண, மத நம்பிக்கைகளோடு இறுகக் கட்டப்பட்டு இருந்தன. "உணர்வுகள் வாழ்க்கை ஆவதில்லை. வாழ்க்கை தான் உணர்வுகளைத் தீர்மானிக்கிறது" எனும் ஏங்கல்சின் கருத்துப்படி இந்தியச் சமூகத்தின் பழமையான மனுவாத வாழ்க்கை முறையின் சார்பிலேயே இந்தியரவில் இந்து, கிறித்தவ, இசுலாமிய மத உணர்வுகள் நிரம்பியிருந்தன. இந்தியாவின் சிக்கலான பொருளியல் அசமத்துவம் முதலாளியக் கருத்தியலாருக்கு மட்டுமன்றி பொதுவுடைமை இயக்கக் கருத்தியலாருக்கும் எளிதில் புலப்பட்டிருக்கவில்லை. இந்தியாவின் மரபார்ந்த புராணக் கட்டுமானங்களுக்குள் அசமத்துவக் கூறுகள் பிணைக்கப்பட்டிருந்தன. சமத்துவத்தை நிகழ்த்திக் காட்ட நாட்டின் பன்முகப் பண்பாட்டுக் கட்டமைப்பினை அறிவதும் காரணிகள் ஒவ்வொன்றையும் தொடர்புப்படுத்தியும் விடுதலைக்கானக் கருத்துருவை அடைவதில் பெருமளவுச் சிக்கல்களைக் கொண்டிருந்தன. இருபதுக்கு முந்தைய நூற்றாண்டுகளில் எழுந்த சீர்திருத்த இயக்கங்களும் சமூக முரண்களின் கிளைகளையே அசைத்துக் கொண்டிருந்தன. இந்தியாவில் அரசியல்பட்ட பொதுவுடைமைக் கருத்தியல் எளிய உழைக்கும் மக்களிடம் மார்க்சியத் தத்துவக் கருத்தியலோடு உலகளாவியப் பொருளியச் சிக்கல்களைக் கூட விவாதமாக்கி, கருத்தரசியலை அரசியலை மக்களிடம் வேகமாகக் கொண்டு சேர்த்தது. காலங்காலமாக மக்கள் நம்பிக்கைகளோடு பின்னிக்கிடக்கும் சனாதனப் படிநிலைச் சமூகக் கட்டமைப்புகளைத் தகர்க்க, இரசிய, பிரெஞ்சு புரட்சிகளைப் போலவே, தீர்க்கமான சமூகப் புரட்சிக்கான மாற்றுச் சிந்தனைகளை மக்கள் விரும்பும் கலையியலின் வழியாக முன்வைக்கிற இயக்கங்கள் ஊக்கமளிக்கப் பெற்றன. இலக்கியங்களில் சமூக விடுதலைக் கருத்தியல்கள் மய்யப் பொருண்மையாயின. இலக்கியங்கள் பிரசார இயக்கங்களாகி சமூகப் பயனுறு கருவிகளாயின. இத்தகைய இருபதாம் நூற்றாண்டு அரசியல் காலச்சூழலைக் கருத்தில் கொண்டு இன்குலாப் கவிதைகளை அணுகுவது மேலதிகப் புரிதல்களுக்கு வழிகோலும்.

இன்குலாப் எனும் தனிமனிதக் கவிதை இயக்கம்

இருபதாம் நூற்றாண்டின் மக்களை மய்யமிட்ட அரசியலை சமூகத்தின் அறிவுத் தளங்களின் விவாதத்திற்கு எடுத்துச்சென்ற சிறப்பு தமிழ்க்கவிதை இலக்கிய வெளிக்கு உண்டு. இடதுசாரி இயக்கங்கள் எளிய உழைக்கும் மக்களிடம் கலைப்புலங்களின் வழியாகக் கருத்தியல் பரப்புரைகள் மேற்கொண்டதைத் தொடர்ந்து பல்வேறு முற்போக்குக் கருத்தியலாரும் அவ்வழித் தலைப்படவே கலைப்புலம் அரசியல் தன்மைபெற்று எழத்தொடங்கியது. தமிழ் இலக்கிய உலகிற்கு சமூகப் பதிவுநிலையும் அறிவுசார் மாற்றுச்சிந்தனைப் பரப்புரையும் புதிதல்ல என்றாலும் இருபதாம் நூற்றாண்டின் காலச்சூழல்

வீரியமிக்கதும் காலத்தின் கட்டாயமானதுமாகும். அரசியல் இயக்கமாகவும், இலக்கியக் குழுமமாகவும், இதழ்களாகவும் சிறந்த விவாதப் போக்குடன் இலக்கிய உலகு இயங்கிய போது இன்குலாப் எனும் விடுதலைக் குரலை பெயராகத் தாங்கி, சமூக அவலங்களை வெளிக்கொணர்ந்து, விடுதலைக் கருத்தியலாகத் தான் நம்புகின்ற கருத்தியல்களை வலுவேற்றினார் பாவலர் இன்குலாப்.

"விரியும் எனது கவிதை வரிகளில்
கரியும் உன் காயங்கள்" (ஒ.பு.பெ.சொ.அ. பக்-203)

என சமூகத்தை வாஞ்சையோடு அணுகி,

"போராட்டம் என் பிறப்பின் நியதி...
வாழ்வின் நியதி... முடிவின் நியதி..." (ஒ.பு.பெ.சொ.அ. பக்-186)

என்றவாறு தம் கவிதை நிலைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் இன்குலாப், தம் சமகாலத்திய கவிஞர்களினின்று மாறுபட்டு வெளிப்படுகிறார். தமிழ்ச்சமூகத்தின் தனிநபர் கவிதை இயக்கங்களின் தலைமைப் பாத்திரத்தை இன்குலாப் தமது சமரசமற்ற மக்கள் பாடுநிலைகளாலும், மிகையற்ற சொல்லாட்சிகளாலும், நடப்பியலைக் காட்சிப்படுத்தியத் தன்மையினாலும் தமதாக்கிக் கொண்டுள்ளதை அறிய முடிகிறது.

"புலம்ப மறுக்கும் குரல்கள் உரிமை கேட்குது...
எழுத்து வடிவம் கொடுக்க நமது குரல்கள் ஒலிக்குது" (ஒ.பு.பெ.சொ.அ. பக்-271)
"கவிதையை அலங்காரத் தூசு களங்கப்படுத்தும்" (ஒ.பு.பெ.சொ.அ. பக்-327)

என்ற கூற்றை மெய்ப்பிக்குமாறே, அவலங்களைப் பாடுகையில் அலங்காரத் தன்மைகளை நீக்கி இன்குலாப் கவிதைகள் மக்கள் விடுதலையை முன்னிறுத்திப் பயணிக்கின்றன.

"அரவாணியின் குரலாய்... போராளியின் நம்பிக்கையாய்...
தலித்தின் நாக்காய் என் சினத்தீ" (ஒ.பு.பெ.சொ.அ. பக்-260)

பாதிக்கப்பட்ட மக்களின் குரலாய் நின்று சமூக நிலைகளில் மட்டுமன்றி ஒவ்வொரு தனிநபரின் வாழ்க்கையிலும் தாக்கங்களை ஏற்படுத்த வல்ல அரசியலின் தன்மைகளை உடைத்துப் பேசும் இன்குலாப்,

"மானுடம் கூடும் சுவரில்லாத சமவெளிதோறும்
மனிதம் என்றொரு பாடலை இசைப்பேன்" (ஒ.பு.பெ.சொ.அ. பக்-415)

என விடுதலைக் கருத்தியலின் மய்ய நோக்கமான மானுடச் சமத்துவத்தை வலியுறுத்தி, எல்லா அரசியல் கருத்தியல் நெறிகளுடனும் உழைக்கும் மக்களின் பிரதிநிதியாக வாதிடுகிறார்.

அறிவின் உச்சமெனப் போற்றப்பட்ட புராணக் கட்டுகள் நவீன அறிவியல் சிந்தனைப் பரவலால் நகைப்புக்குள்ளான இருபதாம் நூற்றாண்டின் அறிவியக்கத்தை சமூக மதிப்பீட்டுக் காரணிகளுடன் தொடர்புபடுத்தி ஆராயும் தன்மையதாய் இன்குலாப்பின் கவிதை இயக்கம் காண்கிறது. இடதுசாரிக் கருத்தியலுடன் போராட்ட அரசியலுக்கு உழைக்கும் மக்கள் தலைப்பட்டு வர்க்கப் புரிதலோடு ஓர்மை கொள்ள வேண்டியத் தேவையே இன்குலாப்பின் கவிதை முழுக்க விரவிக் கிடக்கிறது.

சனநாயகத்தில் இன்குலாப்பின் விடுதலைக் கருத்தியக்கம்

காலனிய விடுவிப்புக்குப்பின் மக்களாட்சி நிலைப்பட்டு வாழ்வில் ஒளியேறும் என உழைக்கும் மக்கள் நம்பி ஏமாந்து வெம்பியிருந்த இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் தான் எழுத்துலகில் பயணப்படுகிறார் இன்குலாப். காலனியத்தின் வர்க்கச் சுரண்டல்கள், பண்பாட்டு அடக்குமுறைகள், வாழ்வுரிமை மறுப்புகள் என கனத்த இழப்புகளுக்குப் பின் இந்தியா எனும் கூட்டாட்சித் தத்துவ ஏற்புடன் பயணப்பட்ட உழைக்கும் மக்களின் வாழ்நிலை காலனியத்தைக் காட்டிலும் மோசமான முன்னைப் பிராமணியத்தை உள்ளடக்கிய முதலாளியக் கட்டமைப்புக்குள் சிக்குண்டிருப்பதை மய்யப் புள்ளியாக்கி இயக்கங் கொள்கிறது இன்குலாப்பின் கவிதைத்தளம். 1970களில் பொருளியச் சமநிலையே மக்கள் விடுதலை எனப் பயணப்பட்ட இன்குலாப்பின் கவிதைக் கருத்தியக்கம், சனாதனச் சாதியப் படிநிலைச் சமூகத்தில் ஆதிக்குடிகள் தம் விடுதலையைப் பெற பொருளியச் சமநிலைக்குத் தடையாக இருக்கும் சனாதனக் காரணிகளைப் புரிந்துகொண்டு, திராவிட சுயமரியாதைக் கருத்தியலுடனும் தமிழ்த்தேசிய விடுதலைக் கருத்தியலுடனும், தலித்தியக் கருத்தியலுடனும் ஒத்திசைந்து நடக்கிறது. தமிழ்ச் சமூகத்தின் பொருளிய அசமத்துவப் பின்னணியில் சனாதனச் சாதிய இழிவுகள் உள்ளதை உணர்ந்து, பிராமணியத்தின் வடிவமாகவே இந்தியாவில் முதலாளியம் இயங்குகின்றமையை நடப்புகளில் இருந்து எழும் இன்குலாப் கவிதைகளின் அடிக்குறிப்புகள் உணர்த்தி நிற்கின்றன.

இன்குலாப் கருத்துப் புலப்பாட்டு உத்திகள்

கவனப்படுத்தும் கூவல்

இன்குலாப் கவிதைக் கலையை ஓர் மக்கள் பிரச்சார இயக்கமாகக் கையாள்கிறார். உழைக்கும் மக்களின் குரலாக இலக்கியத் தளத்தினை உருவாக்க பரப்புரை செய்கிறார். மக்களின் இழிவுகளுக்கானக் காரணங்களைக் காட்சிப்படுத்தி, வெகுமக்களை சமூக அவலங்களின் மீது கவனப்படுத்துகிறார். மாற்றத்திற்கான முன்மொழிதலைக் கவிதைவழி நிகழ்த்துகிறார்.

நடப்பனுபவக் காட்சி ஆக்கம்

அனுபவத்தின் ஊடாக, நடப்புகளிலிருந்தே கருக்கொள்ளும் இன்குலாப்பின் கவிதைகள் நடப்புகளை உள்ளது உள்ளபடிக் காட்சிப்படுத்தத் தலைப்பட்டுள்ளன. சமூக அவலங்களைக் காட்சிப்படுத்துகையில் கலையின் நோக்கங்களைக் கருத்தில் கொண்டு மிகையற்றக் காட்சிப்படுத்தங்களால் வாசகனைக் கருத்தோடு ஒன்றி நிற்கிறத் தன்மையினை ஏற்படுத்தி வாதத்திற்கு வலுகூட்டிக் கொள்கிறார் இன்குலாப்.

சாடலும் கலகமும்

சமூக மாற்றத்திற்கான முதற்காரணமாகிய நடப்பின் அநீதிப் போக்கினைக் காட்சிக்குத் தரும் இன்குலாப், அநீதியான சமமற்றச் சூழலை விவரித்து சினந்துச் சாடுகிறார். களத்தின் நடப்புகளுடன் ஒன்றித்தச் சிந்தனைக்கும் செயலுக்கும் வழிநடத்தும் இன்குலாப்பின் மொழிதல் நுட்பம் வாசகனைப் புரிதலுக்கு உட்படுத்தி மாற்றத்துக்கு முன்னான கலகநிலைக்குள் செலுத்துமாறு இயக்கம் பெறுகிறது.

சிதைப்பும் புனரமைப்பும்

நீதியற்ற சமூக நட்பியலின் கூரிய அவதானிப்பிலிருந்து கலக மனநிலையை எட்டும் வாசகன் இயல்பாகவே தீர்வைப் பற்றியச் சிந்தனைகளுக்குத் தலைப்படுகிறான். முன்னை அமைப்புக்குள்ளிருந்து மாற்றம் சாத்தியமில்லை என்பதை உணரவிட்டு கலைப்பு மற்றும் மீள்கட்டுமானத்திற்கான நியாயங்களையும் வாய்ப்புகளையும் பொதுவுடைமைச் சார்புநிலையினின்று முன்வைக்கிறது இன்குலாப்பின் கவிதை இயக்கம்.

கவிதைகளின் மய்யப் பொருண்மையை ஒட்டி இன்குலாப்பின் கவிதைத் தளத்தை இரு நிலைகளில் அடையாளம் குறிக்கலாம்.

- ***மறுப்பியக்கம்***
- ***எதிரியக்கம்***

என இன்குலாப்பின் மொழிதலைக் கண்ணுறுகையில் கிடைக்கின்றத் தமிழ்ச் சமூகத்தின் காட்சி, காலத்தின் பலபட்டத் தன்மைகளையும், தேவைகளையும், இலக்குகளையும் தெளிவுபடுத்துகின்றன.

மறுப்பியக்கங்கள்

சமூகத்தில் மாற்றங்கள் இயல்பானவை அவற்றைத் தடுத்திட இயலாது. முதலாளியச் சமூகத்தில் உழைக்கும் மக்களுக்கான சமூக மாற்றத்தை, வளர்ச்சியினை சாத்தியப்படுத்தும் செயல்பாட்டின் முதல்படியாவது அமைப்பை ஏற்க மறுத்தல் எனும் எதிர்நிலையாகும். சமூக, பொருளாதார நிலைகளில் வஞ்சிக்கப்பட்ட உழைக்கும் மக்களின் பக்கம் நின்று அவலங்களைக் கண்ணுறும் இன்குலாப், சமகால அனுபவங்களின் ஊடாக 1950-ல் உருக்கொண்ட இந்திய தேசிய அரசமைப்பின் மீதான நம்பிக்கை இழக்கிறார். வஞ்சிக்கப்பட்ட உழைக்கும் மக்களுக்கான சமத்துவச் சமுதாயத்தின் தேவையை உணர்ந்து உணர்த்த விழைகிறார். கவிதைக்கலைக்கு போர்க்கலை வடிவம் கொடுத்து விடுதலைச் சிந்தையோடு சமகால அமைப்பினை வலுவாக மறுக்கிறார். மறுப்பின் தன்மைக்குள்ளான ஒவ்வொன்றையும் காரணங்களையும் அவலக்காட்சிகளாக முன்வைத்து வாதிடுகிறார்.

சனாதனிய முதலாளிய மறுப்பியக்கம்

உலகளாவியப் பொருளிய ஆதிக்கத்தின் தனியுடைமைக் கொள்கைகளின் மூலத்தை நோக்கி வாசகனைக் கவனப்படுத்துகிற இன்குலாப்,

“வெள்ளைமாளிகை..!
மண்ணின் மைந்தர்களின் மண்டை ஓடுகளில்…
பற்றி எரிந்த பாலஸ்தீனக் கூடாரங்களில்…
தென்னாப்பிரிக்கச் சிறைகளில்…
ஹிரோசிமாவில்… நாகசாகியில்…
ஒரு கையில் டாலரும்… மறுகையில் துப்பாக்கியுடன்…
வலம் வந்த வழியெல்லாம் விபசார விடுதி…
கரைதாண்டி உன் காமம்” (ஒ.பு.பெ.சொ.அ. பக்-569) என அமெரிக்க வல்லாதிக்கத்தின் வரலாற்றைக் காட்சிக்குத் தந்து முதலாளியத் தனியுடைமை அபாயங்களை முன்வைக்கிறார். இதே காலத்தில், 1990 முதல் 1991 வரை நிகழ்ந்த அமெரிக்க வளைகுடாப் போரும், இந்தியாவின் ஒத்துழைப்பும், 1991 சூலை மாதம் தனியார்மயம் அனுமதிப்பும் ஒருசேர நிகழ்ந்தமை கவனத்துக்குரியது.

“மானுடம் பிளந்து உறிஞ்சும் வாய்”
“வெள்ளை மாளிகை விரிசலிலிருந்து…
செவ்விந்திய அம்பும்… ஆப்பிரிக்க கருங் கைகளும்…
வியட்நாமின் செங்கொடியும் முளைக்கும்” (ஒ.பு.பெ.சொ.அ. பக்-282)

என, விடுதலைக்கான கனவு இந்திய சனநாயக அரசமைப்புடன் முற்றுபெறவில்லை என்பதும், அமெரிக்க, ஐரோப்பியக் காலனிய அடிமைத்தனங்களை எதிர்த்துக் களம்கண்ட உழைக்கும் மக்களால் இந்திய விடுதலை சாத்தியப்பட்டிருக்க, விடுதலைக் களமாடிகளின் வாரிசுகள் அரசியல் வலுவிழந்து பழமைக் கட்டுகளுக்குள் அடைபட்டு நிலவுடமைச் சமூகத்தின் பிற்போக்குகளுக்குள் பாராளுமன்ற மக்களாட்சி சட்டங்களின் மூலமாக அடைக்கப்படுவதை காலமறிந்து காட்சிப்படுத்தியுள்ள இன்குலாப் கவிதைகள்,

“ஜெய ஹே.! என ஏகாதிபத்தியத்தின் குறட்டை ஒலியாய் ஒலிக்கும்” என்றும்,
“சப்புக் கொட்டும் வாயுடன் எம் குஞ்சுகள்” என்றும்,
“மானம் இழந்து மண்டியிட்டால் சனநாயகம்” (ஒ.பு.பெ.சொ.அ. பக்-571)

எனவும் ஏகாதிபத்தியத்திற்கு துணையாகிக் கேலிக்கூத்தாகும் சனநாயக இந்தியாவைக் காட்சிக்குத் தருகின்றன. பொருளியச் சுரண்டலுக்கானப் பன்னாட்டுச் சந்தையின் வாசல்களை வலுப்படுத்த இந்தியாவின் மரபார்ந்த அடிமைத்தனங்களுக்கு வழிவிட்டு நின்ற முதலாளியச் சதிவலைகளை முன்னுணர்ந்து காட்சிக்குத் தந்தமை கவனத்துக்குரியது.

நடப்பியலின் மறுப்புக்கான காரணிகளை உலக அரசியலிலிருந்து உள்ளூர் அரசியல் வரை காட்சிப்படுத்தி விவாதிக்கின்றன இன்குலாப்பின் கவிதைகள். உலகளாவியச் சுரண்டல் வெறிக்கு நிலைக்களனான முதலாளியத்தின் முக்கிய

நகர்வான, 1991 தனியார்மய, தாராளமய ஒப்பந்தங்களின் விளைவுகளை,

"கழனிகள் உவர்மண்ணாய் களவு போகும்…"

"அயலாதிக்கத்துக்கு மூவண்ணக் கொடியே பாதுகாப்பாக..!"

"ரவுலட் சட்டம் தொடர்ந்து கொண்டிருக்கும்"

"உலோக மரத்தில் வேரின்றிப் பரவும்

பிளாஸ்டிக் கொடியில் மணமில்லா மூவண்ணங்கள்" (ஒ.பு.பெ.சொ.அ. பக்-577)

என முன்வைத்துப் பேசுகின்றன இன்குலாப்பின் வரிகள். அறிவினுக்கு ஒவ்வாத புராணக் கட்டுகளே அனைத்துப் பிற்போக்குத் தனங்களுக்கும் அடிப்படையாவதைக் கண்டு அறிவியல் ரீதியிலான சமூகநீதிப் பார்வையுடன் மறுப்புச் சிந்தனையை முன்வைக்கின்றன இன்குலாப் மொழிதல்கள்.

தமிழ்ச்சமூக எதிர்க் கருத்தியல் இயங்கு நிலைகள்

படிநிலைச் சமூக அமைப்புக்குள் கட்டுண்ட தமிழ்ச்சமூகத்தின் நிலையினை கவிதைக் காட்சிகள் தோலுறிக்கின்றன. இந்தியத் தேசியத்துள் கொண்ட உடன்பாட்டினால் உலகளாவிய மானுடநேய கூட்டுறவு நோக்குடன் இலங்கிய, தனித்த மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்களைத் தொலைத்து நிற்கும் தமிழ்ச்சமூகத்தின் காட்சி இன்குலாப் எழுத்தில் வெளிச்சத்துக்கு வருகின்றன. மனுவாத இந்தியச் சமூகத்துக்குள் மதியிழந்த தமிழ்ச்சமூகத்தின் பார்ப்பனீய மனுவாதக் கோட்பாடுகளால் புராணகால மரபுகளாலும், பிறப்பின் அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகளாலும், பாதிப்புக்குள்ளான வெகுமக்களைக் காட்சிப்படுத்துகையில் இன்குலாப்பின் மறுப்பில் சினம் தெறிக்கிறது. நந்தனார் எரிப்பு என புராண வரலாற்றையும், அறிவியல் யுகத்தில் நிகழ்ந்த திண்ணியம் மலந்திணிப்பு, கீழ வெண்மணி கொடுங்கொலை, பாப்பாப்பட்டியின் அரசியல் சனநாயக உரிமை மறுப்பு என, தமிழ்ச் சமூகத்தின் சாதிய மனோநிலையும், குறுங்குழு வாதங்களும், மனுவாதச் சார்பு பெற்றிருத்தலையும் காட்டி, சாதி, அரசமைப்பின் போதாமையைச் சுட்டிக்காட்டி கடிந்துரைக்கிறார்.

சமய மறுப்பியக்கம்

சாதிய இழிவுகளின் சமூக நிறுவனமாக சமயங்கள் தனது மூர்க்கத்தனமான நியமனங்களால் நவீனத்தின் அறிவியல் அடிப்படைகளை ஏற்காமல் முன்னை அடிமைத்தனங்களுக்கும் வாழ்வுரிமைத் தடைகளுக்கும் அரண் செய்வதோடு, பொருளியச் சுரண்டலின் வேர்களைப் பாதுகாக்கின்ற தன்மையைக் காட்சிப்படுத்தி சமய மறுப்பினை முன்னெடுக்கின்றன கவிதை வரிகள். முற்போக்கு இயக்கங்களில் சமயப் பிரிவினைகளின் மீது காட்டும் தீவிரம் சாதியத்தின் எதிர்ப்பில் இல்லாமலிருந்தது. சாதியம் மென்மையாக அணுகப்பட்டு நிராகரிப்பின்றி ஏற்கப்பட்ட இயங்குத் தளத்தினை பெற்றிருந்தது. இந்நிலையில் சாதியும் மதமும் குறித்த எதிர்க்கருத்தியலை வடிவமைத்த பெரியாரின் சிந்தனைகள் இன்குலாப்பின் கவிதைகளில் மய்யங்கொண்டு இயங்கியது. கிறித்தவ, இசுலாமியரல்லாத பெரும்பான்மையான கடவுள் நம்பிகைகளை இந்து என ஒற்றை மயப்படுத்தியப் பின்னணியில் வர்க்கமாக உழைக்கும் மக்கள் அணிதிரள்வதைச் சிதைக்கும் முயற்சியாகவேப் பார்க்கும் இன்குலாப்,

"மதம் வேண்டாம் – நல்ல மனம் தான் வேண்டும்"

"வானரப் படையாய் இலங்கையில் மடிந்தாய்,

வரலாறு நெடுக உன்னை இழந்தாய்" (ஒ.பு.பெ.சொ.அ. 578) *என மதவாத அரசியலில் தமிழ்ச் சமூக நிலையை கடிகிறார். நிலவுடைமைச் சமுதாயக் கழிவுகளான மனுவாத சாதியக் கட்டமைப்பை வலுப்பெறச் செய்வதன் வாயிலாக பொருளிய ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள முயற்சிக்கும் சக்திகளின் செயற்களனாக மாறிப்போன இந்தியத் தேசியத்தின் சாத்திரச் சழக்குகளில் தன்னிலை இழந்து நிறம் மாறும் தமிழ்ச் சமூகத்திற்கு, அதன் பெருமைமிகு வரலாற்றை நினைவுறுத்தியே சமகால அசமத்துவ அமைப்பை மறுக்கின்றன இன்குலாப்பின் வரிகள்.*

"மதங்களின் வடிவில்
மரபின் அழுத்தத்தில்
சட்டங்களின் அச்சுறுத்தலில்
ஆதிக்கங்கள்..." (ஒ.பு.பெ.சொ.அ. 410) *என மதங்களே சட்டங்களாகி ஆதிக்கங்களின் புகலிடமாக இயங்குவதைக் காட்சிப்படுத்தி நிற்கிறார். காலனிய ஆதிக்கத்தில் பலப்பல காரணங்களைக் காட்டி யாரையெல்லாம் பொது எதிரிகளாக காட்சிப்படுத்தி உழைக்கும் மக்களை அணிதிரட்டி முன்களத்தில் போரிடச் செய்ததோ அதே ஏகாதிபத்திய வழித்தோன்றல்களுக்கு பாதை அமைத்து உழைக்கும் மக்களைச் சுரண்டும் உரிமையளிக்கும் ஒப்பந்ததார இந்தியத் தேசியத்தை அம்பலப்படுத்தி நிற்கின்றன இன்குலாப்பின் அனல் வரிகள்.*

இன்குலாப் கவிதையில் விடுதலைக் கருத்தியல்கள்

இருபதாம் நூற்றாண்டு தமிழ்ச்சமூகத்தின் இயக்கங்களின் தன்மை கழிவிரக்க மனோநிலையினின்று நீங்கி எழுச்சிமிகு எதிர்ப்பியக்கத்தின் வாயிலாக தமிழ்ச்சமூகம் அடைந்திருக்கும் கருத்தியல்சார் அரசியல் தளங்கள் கவனத்துக்குரியன. அவ்வ நோக்கினால் மறுத்தும், கலகம் செய்தும், அமைப்பைக் கலைத்துப் புனரமைத்திடும் நோக்குடன் களமாடிய விடுதலைக் கருத்தியல் இயக்கங்களைக் காட்சிப்படுத்தி நிற்கின்றன இன்குலாப் கவிதைகள்.

பெரியாரிய விடுதலைக் கருத்தியல்

தமிழ்ச்சமூகத்தின் சாதிய இழிவுகளுக்குக் காரணமான யாதொன்றையும் சமரசமின்றி எதிர்த்த எதிர்ப்பியக்கமே பெரியாரியம். பெரியாரியக் கருத்தியல் கடவுள் முதலான எல்லா அடிப்படைக் கட்டுமானங்களையும் புனிதங்களையும் கேள்விக்கு உட்படுத்தி அறிவின் சார்புகொண்டு அம்பலப்படுத்தியது. இருபதாம் நூற்றாண்டில் தமிழ்ச் சமூகம் கண்ட மாபெரும் எழுச்சியான பெரியாரிய இயக்கத்தின் தன்மைகளை எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக் கொண்டு விடுதலைக் கருத்தியலாக முன்மொழிகின்றன இன்குலாப் கவிதைகள். மேலும், பெரியாரியச் சிந்தனைகளின்பால் விடுதலைக் கருத்தியக்கங்கள் ஓர்மைப்படுவதற்கான அறைகூவலையும் முன்வைக்கின்றார் இன்குலாப்.

"நால்வருணம் மனிதரைப் பிரிக்கும் - எம்

பெரியாரியம் கறையை வெளுக்கும்" (ஒ.பு.பெ.சொ.அ.)

இந்தியச் சமூகத்தின் பொருளிய அடிமைத்தனங்களுக்கு பின்னணியில் மனுவாதச் சாதியக் கட்டமைப்பும் அதனைப் பாதுகாக்கும் பிராமணியச் சமயக் கட்டமைப்பும் இயங்குவதை நுட்பமாகக் கண்டறிந்த பெரியார், இந்தியாவில் நிலவுவது சனாதனிய முதலாளியம் என்பதை முன்குறித்துக் களம் கண்டார். பெரியாரின் கருத்தியலுடன் சற்றும் முரண்படாமல் ஒத்திசைந்து பயணிக்கிற இன்குலாப், பெரியாரின் கருத்தினின்று விலகி அதிகாரத்தை எளிய மக்களுக்கு எதிராகப் பயன்படுத்திய திராவிடக் கட்சிகளின் எதேச்சதிகார நிலையைக் கடுமையாக விமர்சித்தும் நிற்கிறார்.

மார்க்சிய விடுதலைக் கருத்தியல்

மார்க்சின் தத்துவங்களை வியந்தோதும் இன்குலாப் உலகளாவிய மானுட ஒன்றுகூட்டலுக்கானத் தீர்வாக மார்க்சியக் கருத்தியலை முன்னிறுத்துகிறார். மார்க்சியமே மக்கள் விடுதலைக்கான இறுதித் தீர்வு என்ற முன்வைப்புகளுடன், தமிழ்ச் சமூகத்தில் மார்க்சிய இயக்கங்களின் களப்பணிகளிலும் களமாடிய இன்குலாப், தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கப் பொருளியச் சிந்தனையிலான வர்க்க ஒருங்கிணைப்பின் அவசியத்தை உணர்த்துகிறார்.

"நெருப்பாற்றில் நீந்தக் கற்ற

ஒவ்வொரு கம்யூனிஸ்டும்...

வர்க்கச் சுரண்டலுக்கு

மவுன சாட்சியாக மாட்டான்...

செங்கொடி முகமூடியாக

அவனது கைகள் அனுமதியாது" எனவும்,

"களத்து மேட்டிலும் பாக்டரியிலும்

வீட்டிலும் தெருவிலும்...

கிடக்கும் தீப்பொறிகளே

வர்க்க நெருப்பாக மூண்டெழுங்கள்" (ஒ.பு.பெ.சொ.அ.) எனவும் அறைகூவல் விடுக்கிறார். இன்குலாப் சமகால நடப்புகளில் பொதுவுடைமை இயக்கத்தின் போதாமையையும், வீரியமற்றத் தன்மையையும் சாடாமலும் இல்லை. முரணற்று இயங்குகிற எந்தக் கருத்தும் புனிதப்பட்டு கெடுவதே வரலாறு. ஆக, முரண்படுதலும் விமர்சித்து நெறிப்படுவதும் பொதுவுடைமைக் கருத்தியலின் சிறந்தத் தன்மையாகக் கொள்ளலாம். அவ்விதமாகவே இன்குலாப்பின் இடதுசாரி இயக்க முரண்களை அணுகிட முடிகிறது. வியட்நாம் புரட்சி வெற்றியிலும், மே தினம் குறித்த வருணிப்புகளிலும், வெண்மணி சாட்சியங்களிலும் இடது இயக்கத்தின் மீதான உறுதியான நம்பிக்கையைப் புலப்படுத்தி நிற்கிறார் இன்குலாப். நிலவுரிமையைக் கோரவும், வேளாண் நிலையை விவாதிக்கவும், சுரண்டலை எதிர்க்கவும், தொழிலாளர் நிலை உயரவுமாக பொதுவுடைமைக் கருத்தியலைத் தீர்வாக முன்வைத்தே இயங்குகிறது இன்குலாப்பின் கவிதை இயக்கம். தமிழினத்துக்கென தனிநாடு அடைகின்ற ஈழ விடுதலைப் போரை முன்னிறுத்தும் போது,

"ஒடுக்கப்படுகிற உலக மானுடத்தோடு

கண்ணீரையும் எழுத முனைந்தால்...

சங்கடப்படுமோ உன் சர்வ தேசியம்" (ஒ.பு.பெ.சொ.அ.)

எனக் கடுமையாகச் சாடியுள்ளார். குறிப்பாக பொதுவுடைமைக் கருத்தியலாரின் மாறுபட்ட அல்லது குழப்பமான முடிவுகளையும் கடுமையாக விமர்சித்து நிற்கிறார்.

தலித்திய விடுதலைக் கருத்தியல்

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமைகளை மீட்டெடுத்து கல்வி, வேலை உள்ளிட்ட உரிமைகளால் வாழ்வை நிலைப்படுத்துகின்ற அரசியல் அணியமாக்கும் கருத்துருவே பாபா சாகேப் அம்பேத்கர் முன்னெடுத்த தலித்தியக் கருத்தியல். இந்தியத் தேசியத்திற்குள் மறுக்கப்பட்ட உரிமைகளைச் சட்ட ரீதியாகப் போராடிப் பெற்று சாதி, மத, இன, மொழி பிரிவினைகளால் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை மக்களின் துணைநிற்கும் இயக்கமாக தலித்திய கருத்தியலைக் காட்சிப்படுத்துகிறார் இன்குலாப்.

"கூடுகளில் புதிய சிறகுகள் முளைக்கின்றன...

மனுநூல் எம்மை அடிமைப்படுத்தும்

அம்பேத்கரியம் எம்மை விடுதலை செய்யும்" (ஒ.பு.பெ.சொ.அ.)

என உறுதியாகக் கட்டியங்கூறும் இன்குலாப், தலித்திய விடுதலைக் கருத்தியல் மீது கொண்ட நம்பிக்கையைக் காண முடிகிறது. உழைக்கும் மக்களான ஒடுக்கப்பட்ட தொல்குடி மக்கள் அணியமாதலும் அதிகாரமடைதலுக்குமானத் தேவையை தலித்தியக் கருத்தியல் தளத்திலிருந்தே இன்குலாப் முன்வைக்கிறார்.

பெண்ணிய விடுதலைக் கருத்தியல்

மனித சமூகத்திலேயே ஒடுக்கப்பட்ட இனங்களில் பெண்களின் நிலை மாறுபட்டத் தன்மைகளைக் கொண்டதாகும். எல்லா நிலைகளிலும் கீழ்ப்பட்டு உலகின் எல்லா வகை அடக்குமுறைகளுக்கும் ஆட்பட்ட, ஆட்படுகிற பெண்களின் நிலை குறித்த மாற்றுச் சிந்தனை தமிழ்ச் சமூகத்தில் வீரியமாக இயக்கம் கண்டிருந்தாலும் சாதிய, மத, கலாச்சாரக் கட்டுகளை உடைத்து பெண் மீட்சி காண்பதில் பல்வேறு சிக்கல்கள் தொடர்ந்து வருகின்றன.

"சமையல் அறையில் மண்டும் புகையில்

சபம்பிய வேர்வை மலர்க் குலமோ...

எத்தனை காலம் இக்கூண்டுக்குள்ளே…

வளைக் கரங்கள் இனி ஆயுதக்கரங்கள் ஆகட்டும்'' (ஒ.பு.பெ.சொ.அ.)

பெண்ணின விடுதலைக்கானச் சிக்கல்களை எதிர்கொள்ள பெண்களே முன்னின்று களமாட வேண்டும் என்றும், தமக்கான விடுதலையைத் தாமே தீர்மானிக்க பெண்கள் அரசியல் களமாடிட வலியுறுத்துகின்றன இன்குலாப் கவிதைகள்.

சனாதன எதிர்ப்பில் திராவிடக் கருத்தியல்

பொருளிய ஆதிக்க மனோநிலையுடன் பார்ப்பனியக் கூட்டமைப்பாகவே மாறிப்போன காங்கிரஸ் இயக்கத்தினின்று நீங்கி, எழுந்த நீதிக்கட்சியின் நீட்சியாகவும், சமரசமற்ற எதிரெழுச்சியுடனும் களம்கண்ட பெரியாரின் ஆரிய, பார்ப்பனீய எதிர்க்கருத்தியலே திராவிடம் ஆகும். பெரியாரின் சமூகநீதி இயக்கச் சிந்தனைகளுக்கு அரசியல் அதிகாரமடைந்து செயல்வடிவம் தரும் முகமாக அண்ணாத்துரை தலைமையில் தேர்தல் அரசியல் களப்பட்ட திராவிட இயக்கம் தன் நோக்கத்தினின்று மாறுபட்டு சாதிய அரசியல் மயப்பட்டும், முகத்துதி விளம்பர அரசியலுக்கு ஆட்பட்டும் இயங்கியபோது,

"மனக்குகையில் எழுந்த சிறுத்தை

சிறை வைக்கப்பட்டது'' என்றும்,

"உயர்த்தப் பட்ட கருமை

நயவஞ்சகத்தின் திரையாகிவிட்டது'' (ஒ.பு.பெ.சொ.அ.) எனவும், கடுமையான விமர்சனங்களைத் தொடுக்கும் இன்குலாப், கீழ் வெண்மணி, மாஞ்சோலை கொலை போன்ற நிகழ்வுகளிலும், தமிழீழ நிலைப்பாடுகளிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்பாடுகளைக் கடுமையாக எதிர்த்து இயங்கினார். கருணாநிதி, இராமச்சந்திரன், ஜெயலலிதா ஆகியோரின் மீதான இன்குலாப்பின் விமர்சனங்கள் கருத்தியல் சார்பற்ற, முகத்துதி அரசியலின் கேடுகளைக் காட்சிக்குத் தருகின்றன. தக்க புரிதலில்லா தலைமையமைந்தால் எத்தகைய விடுதலைக் கருத்தியலும் சாரமற்றுப் போகும் என்பதை இன்குலாப்பின் வரிகள் வலியுறுத்தி நிற்கின்றன.

தமிழ்த் தேசிய விடுதலைக் கருத்தியல்

இந்திய தேசியத்துக்குள் செய்துகொண்ட அரசியல் சமரசங்களால் தனித்துவமிழந்து நின்ற தமிழ்ச் சமூகத்தின் விடுதலையை விரும்பிய இன்குலாப், தமிழீழம் கோரிப் போராடிய தமிழர்களின் குரலுக்கு வாழ்நாள் முழுக்க தம் கவிதைகளால் வலுவேற்றிக் கொண்டே இருந்திருக்கிறார்.

"தன்னினம் காக்க நஞ்சு தறிக்கும்

காந்தளம் பூக்களே

தமிழீழத்தின் தேசியப் பூக்களாய்…'' (கா.நா)

என விடுதலைக் கனவினை வியந்துப் போற்றிக் கொண்டே தமது கவிதையின் இயக்கத்தை அமைத்திருக்கிறார். ஈழப் போரின் இறுதி கட்டங்களில் இன்குலாப்பின் கவிதை அங்கலாய்த்துப் புலம்புதலையும் காண முடிகிறது. தமிழீழ விடுதலைப் பொய்த்துப் போனதென ஏற்க மறுத்த இன்குலாப்பின் வரிகளில் விடுதலைக் கனவே நிரம்பிக் கிடக்கிறது.

தொகுப்புரை

- *இன்குலாப்பின் தனி மனித கவிதை இயக்கம் மக்களை மய்யமிட்டதாக அமைந்திருக்கிறது. உழைக்கும் மக்களின் மீதான அனைத்து அடிமைத்தனங்களும் தீர்வுகளைத் தேடும் முயற்சியாகவே இன்குலாப் கவிதை இயக்கம் கண்டுள்ளது.*
- *உழைக்கும் மக்களின் விடுதலை ஒன்றே இலக்காகக் கொண்டிருந்த இன்குலாப், எழுத்துலகத் தொடக்கத்தில் மார்க்சியக் கருத்தியேலோடும், பின்னர் பெரியாரியக் கருத்தியலோடும், தலித்தியக் கருத்தியலோடும் பயணிக்கின்றமையைக் காண முடிகிறது. மக்களின் விடுதலையை பொருளியச் சமநிலைப் பார்வையில் அணுகும் மார்க்சியமும், சுயமரியாதைப் பார்வையில் அணுகும் பெரியாரியமும், சமூகநீதிப் பார்வையில் அணுகும் தலித்திய, பெண்ணிய கருத்தியல்களும் கருத்தியல் ஓர்மை கொள்ள வேண்டும் என்கிற இன்குலாப்பின் அறைகூவல் கவிதைகளில் வெளிப்படுகிறது.*
- *சமகால நடப்புகளிலிருந்து வரலாற்றையும், வரலாற்றின் தடயங்களிலிருந்து படிப்பினைகளையும் வலியுறுத்தி, மாற்றத்திற்கானக் கருத்தரசியல் தேவையை மய்யமாக்கி செயல்பட்டுள்ள இன்குலாப், தமது விடுதலை நோக்கிற்கு முற்போக்குக் கருத்தியல்களை வலுவேற்றி இயங்கியமைப் புலனாகிறது.*
- *தமிழ் இலக்கிய வெளிக்கு அமைப்பிலும் உள்ளடக்கத்திலும் எடுத்தோது நிலையிலும் சொல் தோரணங்கள் இன்றியும் புதிய உச்சங்கங்களைத் காட்டி இயக்கம் கண்டுள்ளமைத் தெளிவு. இன்குலாப் எதிர்கால இலக்கிய வெளி பயணிக்க வேண்டிய திசையினையும் தேவையையும் கவிதைகளூடாக வெளிப்படுத்தியும் ஆற்றுப்படுத்தியுள்ளார்.*
- *உழைக்கும் மக்கள் சமத்துவம் எய்துவதும், இந்திய சனாதனிய முதலாளியக் கூறுகளின் நாகரீக வளர்ச்சிப் பரிணமிப்புகளையும் காட்சிப்படுத்தியுள்ள இன்குலாப்பின் கவிதைகள் தமிழ்ச் சமூகத்தின் விடுதலைக் கருத்தியல்களின் தொகுப்பாகவும் பிரதிநிதியாகவும் வெளிப்படுகிறது என்பதே இக்கட்டுரையின் வழி புலப்பட்டுள்ளது.*

சுருக்கக் குறிப்புகள்

- *ஒ.பு.பெ.சொ.அ. – ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்*
- *கா.நா – காந்தள் நாட்கள்*

முதன்மைச் சான்றுகள்

- *"ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்" – இன்குலாப் 2017, அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர்.*

துணைமைச் சான்றுகள்

- *"நவீனத் தமிழ்க் கவிதையின் போக்குகள்" – கரிகாலன் 2005, மருதா பதிப்பகம்.*
- *"புதியக் கவிதைகளில் மார்க்சியம்" – ஆ.செகந்நாதன் 1983, மணிவாசகர் பதிப்பகம்.*
- *"கவிதையின் உயிர் உடல் உள்ளம்" – க.ப.அறவாணன் 1977, பாரி நிலையம்.*
- *"சமூகவியலும் இலக்கியமும்" – க.கைலாசபதி 1979, நியூ செஞ்சுரி புக்ஸ்.*
- *"கலை இலக்கியம் ஓர் தத்துவப் பார்வை" – ஞானி 1975, வேள்வி வெளியீடு, கோவை.*
- *"மார்க்சிய சமூகவியல் கொள்கை" – நா.வானமாமலை 1976, நியூ செஞ்சுரி புக்ஸ். சென்னை.*
- *புதுக்கவிதை புதுப்பார்வை" – பாலா 1999, அகரம் வெளியீடு*
- *புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம் – இரா.சம்பத் 1992, உமா பதிப்பகம், புதுவை.*